

# ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ர லிகித ஜப நோட்டு

ஹயக்ரீவ, ஹயக்ரீவ, ஹயக்ரீவ


Hayagreeva, Hayagreeva, Hayagreeva,

## கலை, கல்வி, ஞானம், செல்வம், புகழ்

மாணவர்கள் பரீட்சையில்
வெற்றி பெற்று
நல்ல மதிப்பெண் பெற

30/-


**ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ரம்**



# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள்

இராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி - 605 003. www.facebook.com/srilakshmihayagreevartemplepondycherry/






## வெளியீடு:

# ஸ்ரீ லக்ஷ்மி சரஸ் மாருதி ட்ரஸ்ட்

நெ.9, ராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-605 003.

போன்: 0413-2260096

www.facebook.com / srilakshmihayagreevartemplepondycherry/

E-mail: srilakshmihayagreevar@gmail.com



ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# ।। ஸ்ரீஹயக்ரீவகவசம் ।।



பார்வத்யுவாச:-

தேவ தேவ மஹாதேவ கருணாகர ஶங்கர।
த்வயா பரஸாத ஶீலேந கதிதாநி ரமாபதே:।।1।।

பஹூநாமவதாராணாம் பஹூநி கவசாநி ச।
இதாநீம் ஶ்ரோதுமிச்சாமி ஹயாஸ்ய கவசம் விபோ।।2।।

ஶிவ உவாச:-

தேவி ப்ரியம் வதே துப்யம் ரஹஸ்யமபி மத்ப்ரியே।
கலஶாம்புதிபீயூஷம் ஹயாஸ்ய கவசம் வதே।।3।।

மஹாகல்பாந்தயாமிந்யாம் ஸஞ்சரம்ஸ்து ஹரிஸ்வயம்।
லீலயா ஹயவக்த்ராக்ய ரூபமாஸ்தாய யோऽஹரத்।।4।।

புத்ர வாத்ஸல்யதோ மஹ்யம் விரிஞ்சிருபதிஷ்டவாந்।
ஹயாஸ்ய கவசஸ்யாஸ்ய ருஷிர்ப்ரஹ்மா ப்ரகீர்தித:।।5।।

சந்தோநுஷ்டுப் ததா தேவோ ஹயக்ரீவ உதாஹ்ருத:।
ஹ்ரௌம் பீஜம் து ஸமாக்யாதம்
ஹ்ரீம் ஶக்திஸ்ஸமுதாஹ்ருதா।
ஓம் கீலகம் ஸமாக்யாதமுச்சைருத்கீலகம் ததா।।6।।

லக்ஷ்மீகாரம்போருஹ ஹேமகும்ப
பீயூஷபூரைரபிஷிக்த ஶீர்ஷம்।
வ்யாக்யாக்ஷமாலாம்புஜ புஸ்தகாநி
ஹஸ்தைர்வஹந்தம் ஹயதுண்ட மீடே।।7।।

ஸுதாஸிக்தஶ்ஶிர: பாது பாலம் பாது ஶஶிப்ரப:।
த்ருஶௌ ரக்ஷது தைத்யாரி: நாஸாம் வாக்ஜ்ரும்பவாரிதி:।।8।।

ஶ்ரோத்ரம் பாது ஸ்திரஶ்ரோத்ர: கபோலௌ கருணாநிதி:।
முகம் பாது கிராம் ஸ்வாமீ ஜிஹ்வாம் பாது ஸுராரிஹ்ருத்।।9।।

ஹநூம் ஹநுமதஸ்ஸேவ்ய: கண்டம் வைகுண்டநாயக:।
க்ரீவாம் பாது ஹயக்ரீவ: ஹ்ருதயம் கமலாகர:।।10।।

உதரம் விஶ்வப்ருத் பாது நாபிம் பங்கஜலோச ந:।
மேட்ரம் ப்ரஜாபதி: பாது ஊரு பாது கதாதர:।।11।।

ஜாநுநீ விஶ்வப்ருத் பாது ஜங்கே ச ஜகதாம் பதி:।
குல்பௌ பாது ஹயத்வம்ஸீ பாதௌ விஜ்ஞாநவாரிதி:।।12।।

ப்ராச்யாம் ரக்ஷது வாகீஶ: தக்ஷிணஸ்யாம் வராயுத:।
ப்ரதீச்யாம் விஶ்வப்ருத் பாது உதீச்யாம் ஶிவவந்தித:।।13।।

ஊர்த்வம் பாது ஹரிஸ்ஸாக்ஷாத் அத: பாது குணாகர:।
அந்தரிக்ஷே ஹரி: பாது விஶ்வத: பாது விஶ்வஸ்ருட்।।14।।

ய ஏதத்கவசம் தீமாந் ஸந்நஹ்யேந்நிஜவிக்ரஹே।
துர்வாதிராக்ஷஸவ்யூஹை: ஸ கதாசிந்ந பாத்யதே।।15।।

படேத் ய ஏதத் கவசம் த்ரிஸந்த்யம் பக்தி பாவித:।
மூடோபி கீஷ்பதிஸ்பர்தீ ஜாயதே நாத்ர ஸம்ஶய:।।16।।

।।இதி ஸ்ரீஹயக்ரீவ கவசம் ஸமாப்தம்।।

பரீக்ஷையில் வெற்றி நிச்சயம்



ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதன பரப்ரம்ஹமணே நம:
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

ஸ்ரீஹயக்ரீவர் மந்திரம் சத்தியம்



**ஜ்ஞாநாநந்தமயம் தேவம் நிர்மலஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் ஸர்வவித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே**

தூயமெய்யுணர்வு வடிவானவரை, ஸ்படிகம் போன்று தூய்மையானவரை
எல்லா அறிவுக்கும் ஆதாரமானவரை ஹயக்ரீவரை (நான்) வணங்குகிறேன்.

# ஸ்ரீ ஹயக்ரீவர் மந்த்ர லிகித ஜப நோட்டு

குறிப்பு: 1008 மந்த்ரம் எழுதி முடித்தவுடன் கீழ்க்காணும் விவரங்களைப் பூர்த்தி செய்து, அருகிலுள்ள ஸ்ரீஹயக்ரீவ கோயிலிலோ பெருமாள் கோயிலிலோ துளசி மாலை, தேங்காய், பழம் கொடுத்து லிகித ஜப நோட்டை ஸ்ரீஸ்வாமி பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்து திரும்ப நமது வீட்டிற்கே கொண்டு வந்து பூஜை அறையிலா, அல்லது சுத்தமான இடத்திலோ பத்திரமாக வைத்து தினமும் மலரிட்டு பூஜிக்கலாம்.

லிகித ஜபம் எழுதுபவரின் பெயர்..........................................................................

நக்ஷத்திரம்...................................................ராசி..................................................

முகவரி..........................................................................................................

.....................................................................................................................

தொலைபேசி..................................................மின்னஞ்சல்.........................................



ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

# ஸ்ரீஹயக்ரீவ அஷ்டோத்தர ஶதநாமஸ்தோத்ரம்



ஶ்ருண்வந்து ருஷய: ஸர்வே ஹயஸ்யாஷ்டோத்தரம் ஶதம்।
ஹயக்ரீவோ மஹாவிஷ்ணு: கேஶவோ மதுஸூதந:॥1॥

கோவிந்த: புண்டரீகாக்ஷோ விஷ்ணுர்விஶ்வம்பரோ ஹரி:।
ஆதித்ய: ஸர்வவாகீஶ: ஸர்வாதாரா: ஸநாதந:॥2॥

நிராதாரோ நிராகாரோ நிரீஶோ நிருபத்ரவ:।
நிரஞ்ஜநோ நிஷ்கலங்கோ நித்யத்ருப்தோ நிராமய:॥3॥

சிதாநந்தமய: ஸாக்ஷீ ஶரண்ய: ஸர்வதாயக:।
ஸ்ரீமாந் லோகத்ரயாதீஶ: ஶிவ: ஸாரஸ்வதப்ரத:॥4॥

வேதாத்தர்தா வேதநிதிர்வேதவேத்ய: ப்ரபூத்தம:।
பூர்ண: பூரயிதா புண்ய: புண்யகீர்தி: பராத்பர:॥5॥

பரமாத்மா பரஜ்யோதி: பரேஶ: பாரக: பர:।
ஸர்வவேதாத்மகோ வித்வாந் வேதவேதாந்தபாரக:॥6॥

ஸகலோபநிஷத்வேத்யோ நிஷ்கல: ஸர்வஶாஸ்த்ரக்ருத்।
அக்ஷமாலாஜ்ஞாநமுத்ராயுக்தஹஸ்தோ வரப்ரத:॥7॥

புராண: புருஷஶ்ரேஷ்ட: ஶரண்ய: பரமேஶ்வர:।
ஶாந்தோ தாந்தோ ஜிதக்ரோதோ ஜிதாமித்ரோ ஜகந்மய:॥8॥

ஜந்மம்ருத்யுஹரோ ஜீவோ ஜயதோ ஜாட்யநாஶந:।
ஜபப்ரியோ ஜபஸ்துத்யோ ஜாபகப்ரியக்ருத் ப்ரபு:॥9॥

விமலோ விஶ்வரூபஶ்ச விஶ்வகோப்தா விதிஸ்துத:।
விதீந்த்ரஶிவஸம்ஸ்துத்ய: ஶாந்தித: க்ஷாந்திபாரக:॥10॥

ஶ்ரேய:ப்ரத: ஶ்ருதிமய: ஶ்ரேயஸாம்பதிரீஶ்வர:।
அச்யுதோऽநந்தரூபஶ்ச ப்ராணத: ப்ருதிவீபதி:॥11॥

அவ்யக்தோ வ்யக்தரூபஶ்ச ஸர்வஸாக்ஷீ தமோஹர:।
அஜ்ஞாநநாஶகோ ஜ்ஞாநீ பூர்ணசந்த்ரஸமப்ரப:॥12॥

ஜ்ஞாநதோ வாக்பதிர்யோகீ யோகீஶ: ஸர்வகாமத:।
மஹாயோகீ மஹாமௌநீ மௌநீஶ: ஶ்ரேயஸாம்பதி:॥13॥

ஹம்ஸ: பரமஹம்ஸஶ்ச விஶ்வகோப்தா விராட் ஸ்வராட்।
ஶுத்தஸ்படிகஸங்காஶோ ஜடாமண்டலஸம்யுத:॥14॥

ஆதிமத்யாந்தரஹித: ஸர்வவாகீஶ்வரேஶ்வர:।
நாம்நாமஷ்டோத்ரஶதம் ஹயக்ரீவஸ்ய ய: படேத்॥15॥

வேதவேதாங்கவேதாந்தஶஸ்த்ராணாம் பாரக: கவி:।
வாசஸ்பதிஸமோ புத்த்யா ஸர்வவித்யாவிஶாரத:॥16॥

மஹதைஶ்வர்யமாஸாத்ய கலத்ராணி ச புத்ரகாந்।
அவாப்ய ஸகலாந் போகாந் அந்தே ஹரிபதம் வ்ரஜேத்॥17॥

॥இதி ஸ்ரீஹயக்ரீவாஷ்டோத்ததரஶதநாமஸ்தோத்ரம் ஸமாப்தம்॥

# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் அவதார மகிமை

ஸ்ரீஹயக்ரீவன் அவதாரம் பகவானின் முதல் அவதாரம், மது, கைடபர்கள், என்கின்ற இரண்டு அரக்கர்களால் பிரஹ்மாவிடம் இருந்த திருடப்பட்டு ஒளித்து வைக்கப்பட்ட வேதத்தை அந்த அரக்கர்களை ஸம்ஹரித்து வேதத்தை மீட்டு கொடுத்த அவதாரம்.

வேதங்கள், சாஸ்திரங்கள், அறுபத்து நான்கு கலைகள், எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர் ஸ்ரீஹயக்ரீவர் ஸரஸ்வதி தேவி, தக்ஷிணாமூர்த்தி, வியாஸர், சுப்ரமணியர், விநாயகர் இவர்கள் யாவரும் ஸ்ரீஹயக்ரீவர் அனுக்ரஹத்தால் கல்விக்கு அதிபதி என்கின்ற புகழை பெற்றார்கள். ஸ்ரீஹயக்ரீவர் ஆவணி மாதம் திருவோண நட்சத்திரத்தில் பௌர்ணமி திதியில் அழகான நீண்ட தீர்த்தமான நாசியுடனும், இரண்டு பெரிய மிளிரும் காதுகளுடனும், குதிரை முகத்துடன், சூரிய ஒளி கதிர்கள் பிடரி கேசங்களாக அமைய பூமி நெற்றியாய் அமைய கங்கை, சரஸ்வதி இரு புருவங்களாக அமைய, சந்திர சூரியர்கள் இரு தாமரை கண்களாக அமைய, சந்தியா தேவதைகள் நாசிதுவாரங்களாக அமைய, பித்ருதேவதைகள் பற்காளக அமைய, பிரஹ்ம லோகங்கள் இரண்டு உதடுகளாக அமைய, காளராத்திரி கழுத்தாக அமைய, திவ்விய தேஜஸ்சுடன் ஸ்ரீஹயக்ரீவர் அவதரித்தார். கல்பம், புராணம் இவையாவும் இவர் புகழ்பாடுகின்றன.

ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் ஆங்காங்கே ஸ்ரீ ஹயக்ரீவனை பாடி துதித்துள்ளனர். சுவாமி தேசிகள் காஞ்சியிலிருந்து திருவஹீந்திரபுரம் வந்து, தேவநாதன், ஹேமாம்புஜ நாயகி, திவ்யதம்பதிகளின் அனுமதியை பெற்று எதிரே உள்ள ஔஷதகிரி மலையின் மேல் அமர்ந்து கருட மந்திரத்தை பல்லாயிர கணக்கில் ஆவ்ருத்தி செய்து, ஸ்ரீ கருடன் பிரஸன்னராகி ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசிக்க, சுவாமி தேசிகன் பல்லாயிரகணக்கில் ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தை ஜபிக்க மகிழ்ச்சியுடன் ஸ்ரீ ஹயக்ரீவர் நேரிடையாக தரிசனம் அளித்து தன் லாலாம்ருத்தை ஸ்வாமி தேசிகனுக்கு அருள சுவாமி தேசிகன் முதலில் அருளியது ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் தான்.

இதில் முதல் ஸ்லோகத்தில் ஸ்வாமி தேசிகன் ஞானானந்தமயம் தேவம், நிர்மலஸ்படிகாக்ருதிம், ஆதாரம் ஸ்ர்வ வித்யானாம் ஹயக்ரீவ முபாஸ்மஹே, குதிரையுடனுடைய திருமுக மண்டலத்துடன், ஆனந்த மயமானவராகவும், விளங்குபவர். இத்தனை பெருமைகள் வாய்ந்த ஸ்ரீலஷ்மி ஹயக்ரீவ பெருமாளுக்கு நம்முடைய புதுச்சேரியில்

முத்தியால்பேட்டை ராமகிருஷ்ணா நகரில் 1971-ம் ஆண்டு அருமையான ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பின் 1983, 1995, 2012-ம் ஆண்டுகளில் மீண்டும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

2012-ம் ஆண்டு திருப்பணி செய்யும் பொழுது, மூலவருக்கு மூன்றுநிலை ராஜகோபுரம், மூலஸ்தானம் முழுவதும் மற்றும் கொடிமரம், முன்மண்டபம், இவையனைத்தும் சுமார் ஒரு கோடி செலவில் தங்க மூலாம் பூசபட்டு ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் மூலவர் தங்கம் வேயப்பட்ட மூலஸ்தானத்தில் ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமான் சேவை ஸாதிப்பதைப்போல் காட்சி அளிக்கிறார். மற்றும் பக்தர்கள் வழிபட ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் உற்சவருக்கு ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் திருக்கல்யாண கோலத்தில் அருள்புரியும் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர், மூலவர் உற்சவர், மூலவருக்கு எதிரில் கருடன் சன்னதி, மூலவருக்கு பின்புறம் பிரகாரத்தில் 700 வருடத்திற்கு முற்பட்ட நாகங்களின் கற்சிலைகள் அமைந்துள்ளன. மூலஸ்தான முன் மண்டபத்தில் மிகப்புராதானமான ஸ்ரீ ஹயக்ரீவ கல்பம் எனும் நூலில் கூறப்பட்டதுபோல் ஹயக்ரீவரின் வடிவங்கள் சிமெண்டில் சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. உற்சவர் மண்டபத்தில் தனி சன்னதியில் பாலஆஞ்சனேயர்சன்னதி அமைந்துள்ளது. மற்றும் பஞ்சலோக விக்ரகங்களாக தீர்த்த ஹயக்ரீவர், யோக ஹயக்ரீவர், டோலை ஹயக்ரீவர், ஸ்ரீ லட்சுமி வராகர், ஸ்ரீ லட்சுமி நரசிம்ஹர், ராமலட்சுணன் சீதை அனுமன், புதுவையில் கடலில் கண்டெடுக்கப்பட்டுள்ள வேணுகோபாலன், ருக்குமணி சத்தியபாமா, நவனீதகிருஷ்ணன், சந்தானகிருஷ்ணன், ஸ்ரீவாமன பெருமாள், தந்வந்திரி பகவான், ஆண்டாள், விஷ்வக்ஸேநர், சக்கரத்தாழ்வார், அமிர்தகலச கருடன், பெரியாழ்வார், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், பெரியதிருமலை நம்பி, இராமாநூஜர், திருக்குருகை பிரான்பிள்ளான், நிகமாந்த மஹாதேசிகன், சஷ்டபராங்குசதாசன், ஸ்ரீலஷ்மி குமார தாததேசிகன், ஆகியோர் உற்சவ ரூபமாக எருந்தருளி உள்ளன. நமது ஸ்ரீலஷ்மி ஹயக்ரீவர் சன்னிதியில் இரண்டாவது தளத்தில் அஹோபிலத்தில் உள்ள நவ நரசிம்ஹ மூர்த்திகள் மற்றும் பானக நரசிம்ஹர் (மங்களகிரி) உற்ச்சவ மூர்த்திகளாக எருந்தருளியுள்ளனர்.

திசைமாறிச் செல்லும் நம் குழந்தைகளின் மனதை மீண்டும் பாரத புண்ணிய பூமிக்கே உறிய நெறிமுறைக்கு திரும்ப வேண்டுமானால் வித்யா தேவதையான (கல்விக் கடவுள்) ஸ்ரீலஷ்மி ஹயக்ரீவ பெருமானை மாணவ, மாணவிகள், தினமும் பூஜித்து வரவேண்டும். அப்படி பூஜித்து வந்தால் மாணவ, மாணவியரின் மனதில் தெளிவு பிறக்கும். தீய சிந்தனைகள் அணுகாது. கிரகிப்பு திறனும் அதிகரிக்கும். தன் வயதிற்கு சிறிதளவும் சம்மந்தமில்லாத தவறான எண்ணங்கள் நீங்கும். வாழ்க்கைக்கு மிகமிக அத்தியாவசியமான ஒழுக்கம், தன்னடக்கம், பண்பு, வாக்குவன்மை, விவேகம், தெய்வபக்தி, பெருந்தன்மை, ஆகிய நற்குணங்கள் மாணவ மாணவியரை நாடிவரும்.

# புதுவை ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவர் திருக்கோவிலின் சிறப்பு



- உலகிலேயே ஸ்ரீலஷ்மி ஹயக்ரீவருக்கு தனியான ஒரு திருக்கோயில்.
- ஆவணித் திருவோணம் ஹயக்ரீவ ஜெயந்தியை முன்னிட்டு 10 நாள் பிரம்மோற்சவம்.
- 10-ம் வகுப்பு 11-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு தினங்களில் மாணவ / மாணவியரின் கல்வி வளம் சிறக்க தொடர்ந்து 108 தினங்களுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை.
- புதன் கிழமைகளில் கல்வி வளம் சிறக்க வழிபாடு.
- வியாழக்கிழமைகளில், வியாபார அபிவிருத்தி, குடும்ப ஒற்றுமை,திருமணத்தடை அகல, சந்தான பாக்கியம் ஏற்பட வழிபாடு.
- வெள்ளிக்கிழமைகளில் ஸ்ரீ மஹாலஷ்மிதாயாருக்கு சிறப்பு வழிபாடு, ஸ்ரீ மகாலஷ்மிக்கு சகஸ்ரசாம அர்ச்சனை செய்து ஸ்ரீ லஷ்மி நாராயண ஹ்ருதயம் தீர்த்தத்தில் ஜபித்து தீர்த்த பிரசாதம்.
- சனிக்கிழமை பெருமாளாக வழிபாடு.

. பிரம்மனை படைத்த ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமானை தினமும் வழிபட்டால் பெரும் சபைகளில் சாதுர்யமாக பேசக்கூடிய தன்மை கிடைக்கும்.கல்விக்கடவுள் என்ற பெருமை பெற்ற ஸ்ரீஹயக்ரீவர்தான் பிரம்மனைப்படைத்து அவருக்கு வேதங்களை உபதேசித்தவர் சரஸ்வதிக்கு.குரு என்ற சிறப்பும்இவருக்க உண்டு. வைணவ ஆச்சாரியார்களின் ஒருவரும்,
சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவருமானவேதாந்த தேசிகர், ஹயக்ரீவரின் அருளால் சகல கலைகளிலும் சிறந்து விளங்கினார். ஸ்ரீஹயக்ரீவர் எப்போதும் தூயவெள்ளை நிறத்தில் இருப்பார். அனுமன் சஞ்சீவி மலையை தூக்கி வந்தபோது ஹயக்ரீவரை வணங்கினார் என வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.
புதுவை, தமிழகம் இந்தியாவின் பல பகுதிகளில் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் பக்தர்கள் ஸ்ரீ லஷ்மி ஹயக்ரீவரை பக்தியுடன் வழிபட்டு அவருடைய அருளை பெற்றுச் செல்கின்றனர்.

# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் திருக்கோயில்

புதுச்சேரி, முத்தியால்பேட்டை ராமகிருஷ்ணா நகரில் எழுந்தருளி சேவை சாதிக்கும்

அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள்



## தர்மாதி பீடம் பற்றிய சிறப்புகள்



கூர்மாதீந் திவ்யலோகம் ததநு மணிமயம் மண்டபம் தத்ரதேஷம்
தஸ்மின் தர்மாதி பீடம் ததுபரி கமலம் சாமரக்ராஹிணீஸ்ச
விஷ்ணும் தேவீர் விபூஷாயுத கணமுரகம் பாதுகே வைநதேயம்
ஸேநேசம் த்வாரபாலாந் குமுத முககணாந் விஷ்ணு பக்தாந் ப்ரபத்யே

இந்த ஸ்லோகம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவருக்கும் திருவாரதானத்தின் போது (பொதுவாகவும்) அனுசந்திக்க வேண்டிய முக்கியமான ஸ்லோகம்.

இதன் மூலமாக எம்பெருமான் பரமபதத்தில் எத்தகைய திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கிறான் என்பதனையும் தர்மாதி என்று போற்றத்தகும் பொன் மயமான பீடத்தின் அருகில் எப்படிப்பட்ட காட்சியைக் காண முடிகிறது என்பதனையும் மிகச்சுருக்கமாக அறிவிக்கிறது.

இதனை யோகபீடம் என்றும், அப்பீடத்தின் அருகேயும், படிப்படியாகவும் கிரமமாக எழுந்தருளியுள்ள நித்யசூரிகள், திக்பாலகர்கள் கைங்கர்யம் செய்து கொண்டும் அஞ்சலித்துக் கொண்டுமிருப்பதை ஸ்ரீபாஞ்சராத்தரம் மிக விலக்ஷணமாக எடுத்துரைக்கின்றது.

ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய நித்யக்ரந்தம் என்னும் நூலை கடைசியாக அருளிச்செய்தார். இந்த நூலில் பகவதாராதனம் முக்யமாக எடுத்துரைக்கப்படுகின்றது. அதனுள்ளும் இந்த தர்மாதி யோக பீடம் அழகாகக் காட்டப்படுகின்றது.

இதனையெல்லாம் நினைவில் கொண்டு அதனுள் காட்டியபடிமுழுவதுமாகக் காட்ட முயன்று, ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனுடைய கடாக்ஷத்தால் பூர்த்தியடைந்து இருக்கின்றது.

இத்தர்மாதி பீடத்தில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவனை எழுந்தருளச் செய்து ஸேவிக்கும், ஒவ்வொரு அடியவரும் திருவாராதனத்தில் (பூஜையில்) முறையாக எப்படிஆராதிக்க வேண்டும் என்பதனையும், அதன் பலனையும் உடனே அடைந்து விடுவார்கள்.

பிரபஞ்ச-இவ்வுலகில் இயங்குகின்ற அனைத்து இயக்கங்களுக்கும் ஆதாரமாக இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீபூமாதேவி மூலமாக ஸூர்ய மண்டலத்தையும் தாண்டி பரமபதத்தில், நாகபோகத்தில் வீற்றிருக்கும் வரை ஒவ்வொரு ஆவரணத்திலும் உள்ள அஷ்டதிக்பாலகர்கள், அஷ்டதிக் தேவதைகள், அஷ்டவசுக்கள், நவக்ரஹங்கள் நால்வேதங்களின் மூர்த்திகள், நால்குணங்கள், மும்மூர்த்திகள், அனந்த, கருட, விஷ்வக்ஸேனாதி, த்வாரபாலகர்கள் ஆழ்வாராசார்யர்கள் என்று அனைத்து (பகவத் பாரிஷதர்களாகிய) கைங்கர்ய பரர்களால் ஸேவிக்கப்படும் எம்பெருமானை, அவர்களோடு ஒருசேர ஸேவிக்கும் பாக்யம் நமக்குக் கிடைக்கின்றது.

இந்த தரிசனத்தில் எத்தகைய பலன்கள் கிடைக்கப்பெறும் என்பதை சொல்லத் தேவையில்லை. நமக்கு உள்ளத்தால் உடலால் பிறப்பால் செயலால் எத்தகைய தோஷங்கள் உள்ளதோ அவையனைத்தும் உடனே விலகிடும். ஞானமும் செல்வமும் வந்தெய்தும்.

## தர்மாதி யோக பீட வருணனை

எம்பெருமானே பல உருவங்களில் இந்த உலகினைத் தாங்கி நிற்கிறான். இவை படிப்படியாக சொல்லப்படுகின்றன, முதலில் இரண்டு நிலை, ஒன்று மாபெரும் உருவமுடைய ஆமையாக நாராயணன் உலகைக் தாங்கி நிற்பது. அடுத்து எண்ணற்ற பணா மண்டலங்களையுடைய அனந்தனாக இருப்பது அடுத்து பூமாதேவியும் அதற்குமேலாக தர்ம ஞான, வைராக்ய ஐஸ்வர்யம் என்ற பீடக்கால்களும், அதர்மம் முதலான நான்கு கால்களும் நடுவில் ஸதாசிவனும் கைகூப்பிய வண்ணம் காட்சி தருகிறான்.

இடையே முறையாக இந்திரன், அக்னி, எமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், என்ற எண்மர், குமுதன், குமுதாக்ஷன், புண்டரீகன், வாமணன், சங்குகர்ண, ஸர்வநேத்ர, ஸுமுகன், ஸப்ரதிஷ்டதன் என்னும் கணநாயர்களும், நவக்ரஹ தேவதைகளும் எந்த்ரரூபமாகவும், ரிக், யஜுர், ஸாம, அதர்வண வேதமூர்த்திகளும், ஸத்வ, ரஜோ, குணரூபங்களும், த்வாரபாலகர்களும், அஞ்சலித்த கையராய் காட்சித் தருகின்றனர்.

அற்புதமாக அமைக்கபெற்ற திவ்யரத்ன, கச்சிதமான, பொன்மயமான திருமாமணி மண்டபத்தில், கிரீட, மகுட கேயுர ஹார, கடிகாதி ஸர்வாபரணபூஷிதராய், பொற்றாமரை மலரில், பொற்றாமரையாளுடன் பத்ராஸனத்தில் த்ரிகோண பீடத்தில் ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவன், ஸேவை ஸாதிக்கிறான்.

எம்பெருமான் எழுந்தருளியுள்ள பர்யங்கத்தைச் சுற்றிலும், சாமரமேந்தி கைங்கர்யம் பண்ணும் அஷ்ட சக்திகள், ஸுதர்சன, பாஞ்சசன்ய, கதாபத்ம சார்ங்காதி திவ்யாயுதங்கள், தக்ஷிணாபாகத்தில் ப்ரும்ம, விஷ்ணு, ருத்ராதிகள், வடக்கே ஸனக, ஸநந்தன, ஸனக்குமாரர்கள், மேற்க்கில் துர்க்கை, விக்னேசர், நாரதர், முன்பே அஸ்மத்குருப்பியோ என்னும்படியான ஆசார்யர்களையும், ஸேவித்து எம்பெருமானுடைய முழுமையான, முறையான இன்னருளைப்பெற வேண்டும் என்பதை ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதை மிக விரிவாக உரைக்கிறது. அந்த ஸ்லோகங்களின்படி, தர்மாதி பீடத்தைச் சுற்றிலும் அந்தந்த தேவதைகள், நித்திய சூரிகளின் ஸ்வரூபத்தோடு அமைக்கப்பெற்றிருக்கிறார்கள். முன் சொன்னவாறு ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவரின் பரிபூரணமான திருவருளும், தெள்ளறிவும், ஸேவித்த மாத்ரத்திலேயே கிடைக்கும்.

## (ஆச்சார்யரின் ) ஆயிரமாவது ஆண்டின் அற்புத தரிசனம்

ஸ்வாமி ராமானுஜருடைய ஸஹஸ்ராப்தியை (1000வது ஆண்டு) முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெறுகின்றது. அவருடைய நவநிதியமாகிற வேதாந்த ஸங்க்ரஹம், ஸ்ரீபாஷ்யம் வேதாந்தஸாரம், வேதாந்த தீபம் கீதாபாஷ்யம், கத்யத்ரயம், நித்யம் என்பன. அவற்றுள் பகவதாராதனத்தை முக்கிய நோக்காக எடுத்துச் செல்லும். நித்யக்ரந்தத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் காட்டிய தர்மாதி பீடம் அமைக்கப்பெற்றுள்ளது. இந்த க்ரந்தம் அத

பரமைகாந்திநோ பகவதாராதன ப்ரயோகம் வக்ஷ்யே என்று ஸங்கல்பிக்கப்பட்டுத் தொடங்குகிறது. இந்த ஆராதனம் சாமான்யர்களுக்காக இல்லை. பரமைகாந்திகளுக்கே என்று தொடங்குகிறது. அதனால் அதே ராமானுஜர் எப்படி கோபுரத்தின் மேலேறி அனைவருக்கும் உபதேசம் செய்வித்து உய்வித்தாரோ, அதே வழியில் சாமான்யர்களான அனைவரும் உய்யவேண்டும் என்ற நோக்கில் மானஸீகமாக மனத்தால் எண்ணிச் செய்ய வேண்டிய யோக பீட தரிசனத்தை நிதரிசனமாக நேரில் காட்டும் வண்ணம், இந்த தர்மாதிபீடம் ஸ்ரீ பாஞ்சராத்ர முறைப்படி அமைக்கப் பெற்றுள்ளது.

ஸ்ரீ பாஷ்யகாரரின் 1000-வது ஆண்டு நடைபெறும் இப்போது அவருடைய நித்யமாகிறது அருளிச் செயலை செயல் முறையில் செய்து ஸேவிக்கும் பாக்யத்தை, ராமானுஜரும், ராமானுஜ தயா பாத்ரரும் நமக்காக அன்றோ தந்தருளியிருக்கிறார்கள்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன், தமக்கு ஔஷதகிரியில் ப்ரத்யக்ஷமாகிய போது ஸ்ரீபரிமுகனை வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி எனக்குறிப்பிட்டு இவரே ஸ்ரீவைகுந்தத்தில் விளங்கும் பரதேவதை என சுட்டிக்காட்டுகிறார். ஆகையால் இவ்விதப் பரவாஸதேவஸ்வருபமான ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் இந்த தர்மாதி பீடத்தில் எழுந்தருளி இப்புவியிலேயே அடியார்க்கு ஸ்ரீ வைகுந்த ஸேவை அருள்கிறார் என்பது பெற இயலாததான பெரும் பேறு அல்லவா.

இங்ஙனம்

**ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள் கோவில் சிறப்பு அதிகாரி**

**ஸ்ரீ லக்ஷ்மி சரஸ் மாருதி டிரஸ்ட்**




ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதன பரப்ரம்ஹமணே நம:
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம:




# உரு ஏறத் திரு ஏறும் திரு ஏற வினை மாறும்

வாழ்வின் அனைத்து நலங்களையும் பெறவிருக்கும் மாணவச் செல்வங்களே

**ஸ்ரீகுருவருளையும் திருவருளையும் பிரார்த்தித்து தங்களை மனதார வாழ்த்துகிறது.**

உயிருக்கும் உடலுக்கும் வாழ்வுக்கும் வளம் சேர்க்கும்உயர்ந்த அந்த ஓங்காரப் பொருளைத் தியானித்து ஸ்ரீ ஹயக்கீரீவர் மந்த்ரத்தை ச்ரத்தா பக்தியுடன் எழுதத் தொடங்குங்கள்.

கலை, கல்வி, ஞானம், ஆகியவற்றைப் பெற்று வாழ்வில் மேன்மை காண்பதற்கும் நிம்மதியாய் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கும் நாம் தேர்ந்தெடுக்கும் துறைகளில் வெற்றி காண்பதற்கும் ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ரம் பெருந்துணை புரிகிறது. மந்த்ரத்தை உச்சரிப்பதாலும், எழுதுவதாலும் மனதில் பயம் விலகுகிறது. கல்வியைப் பற்றி தெளிவு பிறக்கிறது. உள்ளம் உறுதி பெறுகிறது. உங்கள் உள்ளத்தில் ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ரம் ஒலித்துக் கொண்டிருப்பதால் அறியாமைத் திரை விலகி ஞாபகசக்தியுடன் ஞான சக்தி அளிக்கிறது. பின் எந்த சஞ்சலமும் இன்றி மனம் அமைதியாய் தேர்வை எழுதுகிறது. உங்களுக்கு அனைத்துத் தேர்வுகளிலும் துறைகளிலும் வெற்றி கிடைக்கிறது.

காலை குளித்தவுடன் இறைவனை வணங்கி ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ரத்தை இடைவிடாமல் தினமும் 108 முறை எழுதி வரவேண்டும். ஒருவர் 1008 முறைதான் எழுத வேண்டும் என்பதில்லை. கோடிமுறை கூட எழுதலாம். எழுத எழுத உங்கள் உள்ளத்தில் மந்த்ர சக்தி துளித்துளியாய் இறங்கி கொண்டே இருக்கும். சிறுதுளி பெரு வெள்ளமாவதைப் போல் குறிப்பிட்ட காலத்திற்குள் உங்களுக்குள் எண்ணிலடங்கா சக்திகள் பெருகி ஊற்றெடுக்கும். அது உங்களை நல்வழியில் இட்டுச் செல்லும். உங்கள் மனமும் இந்த உலகமும் உங்கள் வசப்படும்.

மாணவ, மாணவிகள் எழுத முடியாத நாட்களில் அவர்களுக்காக வீட்டிலுள்ளவர்கள் எழுதலாம். அனைவருமே எழுதி தங்களுக்கு மந்த்ர சக்தியை வளர்த்துக்கொள்ளலாம். மனம் ஒருநிலைப்படும். பயம் விட்டு விலகி ஓடிவிடும். ஸ்ரீஹயக்ரீவர் அருள் நலமும் பொருள் நலமும் ஒரு சேர அள்ளி வழங்குவார். உங்கள் வாழ்க்கை செழித்திருக்கும். நீங்களும் ஏழை எளியோர்க்கு தங்களால் இயன்ற தானத்தைச் செய்யுங்கள். நீங்கள் நினைத்தது நிறைவேறும். உங்கள் வாழ்க்கை வளமாகும். நம்பினோர் கெடுவதில்லை இது நான்குமறைத் தீர்ப்பு.



ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதன பரப்ரம்ஹமணே நம:
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம:





ஸ்ரீஹயக்ரீவரின் அருள்பெற்ற மாணவர்களே, மன அமைதியுடன் தேர்வினை எதிர்கொண்டு நல்ல மதிப்பெண் பெற்று வெற்றிபெற ஸ்ரீஹயக்ரீவர் மந்த்ர லிகித ஜபம் உங்களுக்கு துணை நிற்கப்போகிறது. எதிர்காலத்தை வளமாக்கப்போகிறது. ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மந்திரத்தை எழுதுங்கள். நம்பிக்கையுடன் எழுதுங்கள். பயம் விலகும். தொட்டதெல்லாம் துலங்கும். துவண்ட மனம்மலர்ச்சி கொள்ளும். எடுத்த காரியத்தைலெல்லாம்வெற்றி கூடும். மந்த்ரசக்திநம்மைச் சேர்ந்து பாதுகாப்பு தரும். ஸ்ரீஹயக்ரீவர் நமது எண்ணங்கள் ஈடேற மனதிற்கு அனைத்து சக்திகளையும் வழங்கி அருள் புரிவார்.

படித்துமனதில் ஆழமாய் பதியும். பயமின்றி தேர்வை எதிர்கொள்ளலாம். ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரதிற்கு சக்தி மிக அதிகம். ஸ்ரீஹயக்ரீவரை மனதில் ஆழமாய் பிரார்த்தனை செய்து கொண்டு மந்திரத்தை ஒரு 108 முறை உச்சரித்து விட்டு பாடங்களைப் படியுங்கள். மனம் அமைதியுற்று, படிக்கும் பாடங்கள் மிகத் தெளிவாகப் புரிவதைக் காண்பீர்கள். உங்களுக்குள்ளேயே மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடும். பயம் என்பதே தெரியாது. இது வேத சத்தியம்.

சிறுசிறு செயல்களையும் முறையாகச் செய்பவனே பெரிய மனிதன் ஆகிறான் என்பது மஹான்களின் அருள்வாக்கு. நாம் அனைத்துச் செயல்களையும் முறையாகச் செய்வதற்கு மனம் ஒருமுகப்படும். பதற்றமில்லா தன்மையும் மிக முக்கியம். நீங்கள் அசையாமனம் படைத்தவராக இருந்தால் உங்களை யாரும் எளிதில் சஞ்சலப்படுத்த முடியாது. தீயவழியில் செலுத்த முடியாது. உங்களுக்கு அருள் சக்தியும் மனோ பலமும் இருந்தால் தீய பழக்கம் உள்ளவர்களும் உங்கள் நடத்தையைப் பார்த்து திருந்திவிடுவார்கள். உங்களுக்கு எவ்வளவு புரிகிறதோ புரியட்டும். புரியாததையும் தெரியாததையும் பணிந்து பணிவிடை செய்தும் குருவிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். எனவே ஆசிரியப் பெருமக்களை மதித்துப் போற்றி கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள். பணிவது என்பது நமது வளர்ச்சிக்காக. பணி விடை செய்வது நமது சந்ததிகள் வளர்ச்சிக்காக. வருங்கால சமுதாயத்திற்கு நம்மால் இயன்ற நல்ல செயல்களைச் செய்து காட்டி நாமும் அவர்களும் மனநிறைவுடன், மன மகிழ்சியுடன் வாழ்ந்து மனிதப்பிறவியின் மாண்பை உணர்ந்து இறைநிலை அடைவோமாக. தொடர்ந்து ஸ்ரீஹயக்ரீவர் லிகித ஜபம் எழுதி கலை, கல்வி, ஞானத்தை வளர்த்து இன்பமாய் வாழ்வோம். வெற்றி நிச்சயம். இது வேத சத்தியம்.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதன பரப்ரம்ஹமணே நம:

ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

# ஸ்ரீஹயக்ரீவர் மந்திரம் எழுதும் முறை

1. ஏதாவது ஒரு மொழியில் எழுதினால் போதுமானது. 2. ஸ்ரீஹயக்ரீவ மந்திரம் எழுதும் முன் நன்கு குளித்து, தூய ஆடை உடுத்தி, அவரவர்க்குறிய சமயச்சின்னங்களை அணிந்து ஸ்ரீஹயக்ரீவரை மனமாரத் தொழுது நோட்டில் உள்ள பிராத்தனைப் பாடல்களையும், பிராத்தனையையும்ஒரு முறை சொல்லி எழுத ஆரம்பிக்க வேண்டும். ஒவ்வொரு முறை எழுத ஆரம்பிக்கும் முன் பதினாராம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஸ்ரீஹயக்ரீவஸம்பதா ஸ்தோத்திரத்தை மூன்று முறை பாராயணம் செய்து விட்டு எழுதுதல் விரைவானபலனைத் தரும். 3. ஏதோ ஒரு வேலையைப் பார்த்துக் கொண்டோ, பேசிக்கொண்டோ எழுதுதல் முழுமையான பலனைத் தராது. எழுதுவதையே ஒரு வேலையாகக் கொண்டு மன ஒரு முகப்பாட்டுடன் எழுதினால் முழுப் பலனையும் பெறலாம்.

4. எழுதும்போது மனதிற்குள் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டும் ஸ்ரீஹயக்ரீவரை நினைத்துக்கொண்டும் எழுத வேண்டும். 1008 மந்திரம் தான் எழுத வேண்டும் என்பது இல்லை. நோட்டு தீரத் தீர வாங்கி எழுதலாம். 5. 1008 மந்திரம் எழுதி முடித்தவுடன் அதற்குரிய ஜப ஸமர்ப்பணம் செய்து முடிக்க வேண்டும். நோட்டில் ஜப ஸமர்பணம் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. 6. தங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதலாம். குறிப்பாக அதிகாலை வேளையில் (காலை 5.00 மணி) எழுதுதல் பரம உத்தமம்.

*உங்கள் ப்ரார்த்தனைகள் பலிதமாக நாங்களும் ஸ்ரீஹயக்ரீவரை மனமார ப்ரார்த்திக்கிறோம்.*

அன்புக்குரிய மாணவர்களே


தன்மனப் பகையைக் கொன்று
தமோ குணத்தை வென்று
உள்ளக் கவலை யறுத்து
ஊக்கந் தோளிற் பொறுத்து
மனதில் மகிழ்ச்சி கொண்டு
மயக்கமெல்லாம் விண்டு
சந்தோஷத்தைப் பூண்டு
வாழ்வாங்கு வாழ வாழ்த்தும்



சி. சுப்பிரமணிய பாரதி

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதன பரப்ரம்ஹமணே நம:
ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

# பிரார்த்தனை



கலை, கல்வி, ஞானம், வழங்கும் ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவப் பெருமானே தங்களை மனம், மொழி, மெய்களால் நன்கு பணிந்து போற்றி வணங்கித் துதிக்கின்றோம். பேரருளை வேண்டுகிறோம்.

இறைவா எனது பெற்றோரையும், எனக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியப் பெருமக்களையும் நாள்தோறும் போற்றி வணங்குவேனான. என்னுடன் பயிலும் மாணவ மாணவியரிடம் குற்றம் காணாது அன்புடன் இருப்பேனாக நாங்கள் அனைவரும் ஆரோக்கியத்துடன் ஒற்றுமையாய் வாழ்வோமாக. நாங்கள் பயிலும் பள்ளி மென்மேலும் செழித்து வளர பள்ளியின் கட்டுப்பாட்டுகளுக்கு நான் முழுமனதுடன் ஒத்துழைப்பேனாக. பாரத நாட்டின் தெய்வீகப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாப்பேனாக.

நானும் என்னுடன் பயிலும் மாணவ மாணவியரும் ஆசிரியர்களும் விருப்பு வெறுப்பு இன்றி ஒற்றுமையாக, அறிவுப்பூர்வமாக ஆழ்ந்த அமைதியுடன், கவனத்துடன், சோர்வின்றி, திறமையுடன் தூய்மையுடன், நல் ஒழுக்கத்துடன் செயல்புரிவோமாக. எங்கள் அனைவருக்கும் நீண்ட ஆயுளையும் நோயற்ற வலிவான உடல் நலத்தையும், அறிவுச் செல்வத்தையும், உன்பால்நாட்டின்பால் பேரன்பினையும், உயர்ந்த அறவாழ்க்கையையும், நற்பண்புகளையும் அருள்வீராக. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து யான் எனது என்னும் செருக்கை நீக்கி மனிதப்பிறவியின் மாண்பை உணர உமது அருளை மனமார ப்ரார்த்திக்றோம். பேரருள் புரிவீராக.

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

(கீழ்க்காணும் ஸ்தோத்ரத்தை மூன்று முறை பாராயணம் செய்து விட்டு மந்திரம் எழுத ஆரம்பிக்க வேண்டும்.)

# ஸ்ரீஹயக்ரீவ ஸம்பதா ஸ்தோத்திரம்



ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி வாதிநம் ।
நரம் முஞ்சந்தி பாபாநி தரித்ரமிவ யோஷித: ‖ 1 ‖

ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி யோ வதேத் ।
தஸ்ய நிஸ்ஸரதே வாணீ ஜஹ்நுகந்யாப்ரவாஹவத் ‖ 2 ‖

ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதி யோ த்வநி ।
விசோபதே ச வைகுண்ட-கவாடோத்காடந க்ஷம: ‖3 ‖

ச்லோகத்ரயமிதம் புண்யம் ஹயக்ரீவ பதாங்கிதம் ।
வாதிராஜயதிப்ரோக்தம் படதாம் ஸம்பதாம் பதம் ‖ 4 ‖

'இதி ஸ்ரீஹயக்ரீவ ஸம்பதாஸம்பதாஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்'

ஸ்ரீஹயக்ரீவ காயத்ரீ

வாகீஶ்வராய வித்மஹே ஹயக்ரீவாய தீமஹே தந்நோ ஹம்ஸ: ப்ரசோதயாத் ‖

மந்திரம் எழுதும்போது மனதிற்குள் சொல்லிக்கொண்டே எழுதவும்

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______
6. ______
7. ______
8. ______
9. ______
10. ______
11. ______
12. ______
13. ______
14. ______
15. ______
16. ______
17. ______
18. ______
19. ______
20. ______
21. ______
22. ______
23. ______
24. ______
25. ______
26. ______
27. ______

**ஹயக்ரீவ, ஹயக்ரீவ, ஹயக்ரீவ**

1000______________________________

1001______________________________

1002______________________________

1003______________________________

1004______________________________

1005______________________________

1006______________________________

1007______________________________

1008______________________________



**மாணவர்களே, பின்பக்கத்திலுள்ள லிகித ஜப ஸமர்ப்பணத்தை கட்டாயம் சொல்லவும் அப்பொழுது தான் லிகித ஜபம் பூர்த்தியாகும்.**



# லிகித ஜப ஸமர்ப்பணம்

ஓம் குஹ்யாதி குஹ்ய கோப்த்தா த்வம் க்ருஹாணாஸ்மத் க்ருதம் ஜபம்

ஸித்திர்பவது மே தேவ த்வத்ப்ரஸாதாந்மயி ஸ்திரா

அநேந லிகித ஜபேந பகவான் ஸர்வ தேவாத்மக: ஸ்ரீஹயக்ரீவ ப்ரீயதாம்

ஓம் தத் ஸத் ஸர்வம்ஸ்ரீ ஹயக்ரீவ பாதாரவிந்தார்ப்பணமஸ்து

ஹரி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி:



ஹயக்ரீவ, ஹயக்ரீவ, ஹயக்ரீவ என மும்முறை ஹயக்ரீவ பெருமாளின் நாமத்தை உச்சரிக்கும் போது கைகளால் எழுதும் போது கங்கைநதி எப்படி பிரவாகமாக ஓடிவருகிறதோ அதைப்போல ஸரஸ்வதி நம்முடைய நாவில் அமர்ந்து கல்வி செல்வத்தை அருள்வாள்.





ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள்
இராமகிருஷ்ணா நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி-605 003.
Cell: 90954 28302, 8940093478, www.facebook.com/srilakshmihayagreevartemplepondycherry